FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)*

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318743

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **03/2026** Date: நாள் **09.06.2026**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7(a) & 7(b)**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை **After 06.05.2026 to 04.06.2026 at about 17.42 hrs and 08.06.2026 at about 14.45 hrs.**

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **09.06.2026** Time : நேரம் **09.30 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **09.06.2026** Time : நேரம் **10.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **VAO Office, Keela Thiruchendur Village, Thiruchendur Taluk About 41 Kms South**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **திரு.கு.சுடலைமணி** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **குருசாமி**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **1978** (d) Nationality : நாட்டினம் **இந்தியன்** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி **39, முத்துமாலையம்மன் கோவில் 2வது தெரு, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம். Now at: 32, வ.உ.சி.தெரு, திருச்செந்தூர்.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.சரவணன், கிராம நிர்வாக அலுவலர், கீழத்திருச்செந்தூர் கிராமம், திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ---

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ---

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

09/06/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

J. Anitha 09/06/26
Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் **09.06.2026 at 10.50 hrs**

Name: பெயர் .....**J. ANITHA**....
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
VPAC, Thoothukudi.

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.03/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 09.06.2026-ம் தேதி காலை 09.30 மணிக்கு J.அனிதா, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது, திருச்செந்தூர், முத்துமாலையம்மன் கோவில் 2வது தெரு, கதவு எண் 39 என்ற முகவரி கொண்ட திரு.கு.சுடலைமணி, த/பெ.குருசாமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் அவருக்கும், அவரது சகோதரர் திரு.அண்ணையா அவர்களுக்கும் சொந்தமான கீழத்திருச்செந்தூர் டவுன், புளியடியம்மன் கோவில் தெரு, புதிய நத்தம் சர்வே எண் 1503/4, தற்போதைய கதவு எண் 37 என்ற முகவரியில் அமைந்துள்ள வீட்டிற்கான கூட்டு பட்டாவில் அவர்களது பெயரை சேர்க்க பரிந்துரைத்ததற்காகவும், அவருக்கு சொந்தமான திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் டவுண், புதிய சர்வே எண் 1518/20, 21-ல் அமைந்துள்ள 0.75 அளவுள்ள மனைக்கான கூட்டு பட்டாவில் அவர் பெயரை சேர்ப்பதற்கு பரிந்துரைப்பதற்காகவும், கீழத்திருச்செந்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்கள் ரூ.10,000/- லஞ்சம் கேட்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கீழத்திருச்செந்தூர் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 03/2026 பிரிவு 7(a) & 7(b) of the P.C. Act, 1988 as Amended in 2018-படி 09.06.2026-ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: கு.சுடலைமணி, வயது 48, த/பெ.குருசாமி, 39, முத்துமாலை அம்மன் கோவில் 2வது தெரு, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம். தற்போதைய குடியிருப்பு முகவரி: 32, வ.உ.சி.தெரு, திருச்செந்தூர். தூத்துக்குடி மாவட்டம். செல்: 9994110945. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள்,

லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் தற்போது திருச்செந்தூர், வ.உ.சி.தெரு, க.எண்.32 என்ற முகவரியில் அமைந்துள்ள வீட்டில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருச்செந்தூரில் மணி ரெசிடென்சி என்ற பெயரில் லாட்ஜ் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 08.10.2004 அன்று திருச்செந்தூர் சார்பதிவக ஆவண எண் 1609/2004-ன் படி கீழத்திருச்செந்தூர் டவுன், புளியடியம்மன் கோவில் தெரு, பழைய நத்தம் சர்வே எண் 241/1, புதிய நத்தம் சர்வே எண் 1503/4, தற்போதைய கதவு எண் 37 என்ற முகவரியில் அமைந்துள்ள 80 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டுள்ள காரைக்கட்டு ஆர்.சி.சி. வீட்டினை தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, கீழத்திருச்செந்தூர் டவுன், கிருஷ்ணன் கோவில் தெரு, கதவு எண் 9/100 என்ற முகவரியில் குடியிருந்து வரும் சுடலைமுத்து கோனார் அவர்களின் மகன் திரு.பேச்சிமுத்து (பவர் ஏஜெண்ட்) என்பவரிடமிருந்து ரூ.3,80,000/-ற்கு என் பெயரிலும், என் உடன் பிறந்த சகோதரர் திரு.அண்ணையா பெயரிலும் கிரையத்திற்கு வாங்கினோம். மேற்படி வீட்டிற்கு நத்தம் நிலவரித்திட்டம் பட்டா படி பட்டா வாங்கியிருந்தோம். அதனை தொடர்ந்து மேற்படி வீட்டிற்கான மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு, சொத்துவரி பெயர் ஆகியவை எனது பெயரிலும், எனது சகோதரர் திரு.அண்ணையா பெயரிலும் கூட்டாக மாற்றிவிட்டோம். தற்போது நத்தம் நிலவரித்திட்டம் பட்டாக்களை கணினி வழி பட்டாவாக மாறுதல் செய்யும்போது எங்களது பெயர் அதில் விடுபட்டிருந்ததால், மேற்படி வீடு அமைந்துள்ள இடத்திற்கான கூட்டு பட்டாவில் எங்களது பெயரை சேர்ப்பதற்காக கடந்த 06.05.2026ம் தேதி விண்ணப்ப எண் 2026/N103/28/006781-ன் படி விண்ணப்பத்திருந்தோம். அதனை தொடர்ந்து சுமார் பத்து நாட்கள் கழித்து நான் கீழத்திருச்செந்தூர் கிராம நிர்வாக அலுவலத்திற்கு சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் உங்களது வீட்டிற்கான பத்திரத்திற்கான லிங்க் இல்லாமல் உள்ளது, அதனால் கூட்டுப்பட்டாவில் உங்களது பெயரை சேர்க்க வேண்டும் என்றால் கொஞ்சம் செலவாகும் என்றார். நான் உடனே அவரிடம் எங்கள் வீட்டிற்கு உண்டான ஆவணங்கள் அனைத்தையும் காட்டினேன். அவரும் அதனை பார்த்துவிட்டு சரி நான் கூட்டு பட்டாவில் உங்களது பெயரை சேர்த்துவிட பரிந்துரை செய்து அனுப்பி வைத்து விடுகிறேன் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதற்கு பின்னர் ஒரு சில தினங்கள் கழித்து திரு.சரவணன் அவர்கள் எனக்கு போன் செய்து உங்களது பெயரை கூட்டு பட்டாவில் சேர்க்க பரிந்துரை செய்ய வேண்டும் என்றால் ரூ.10,000/- லஞ்சமாக

கொடுங்கள் என்று கூறினார். நான் உடனே அவரிடம் சார் எங்களிடம் மேற்படி எங்களுடைய வீட்டிற்கான ஆவணங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என்று கூறினேன். உடனே அவர் என்னிடம் சரி அதெல்லாம் இருக்கட்டும் நீங்கள் ரூ.10,000/- கொடுங்கள் என்று கூறினார். நானும் சரி சார் என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டேன். அதன் பின்னரும் இரண்டு மூன்று தடவை அவர் எனக்கு போன் செய்து பணம் என்னாச்சு என்று கேட்டார். நானும் சார் தந்துவிடுகிறேன் என்று சொல்லியே சமாளித்து விட்டேன். இந்நிலையில் 31.05.2026ம் தேதியன்று மேற்படி எங்களுடைய வீடு அமைந்துள்ள இடத்திற்கான கூட்டு பட்டாவில் என் பெயரும், என் சகோதரர் திரு.அண்ணையா பெயரும் சேர்க்கப்பட்டு விட்டது. அதற்குரிய கூட்டு பட்டா எண் 820 ஆகும். இதற்கிடையில் நான் கடந்த 26.09.2024ம் தேதி திருச்செந்தூர் சார்பதிவக ஆவண எண் 2727/2024-ன் படி திருச்செந்தூர் வட்டம், கீழத்திருச்செந்தூர் டவுண், பழைய சர்வே எண் 241/1, புதிய சர்வே எண் 1518/20, 21-ல் அமைந்துள்ள 0.75 அளவுள்ள மனையினை, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பொள்ளாச்சி கிராமம், ஜுபிலி தெரு, கதவு எண் 63/23 என்ற வீட்டில் வசித்து வரும் திரு.நடராஜ் அவர்கள் மனைவி திருமதி.மணிமேகலை என்பவரிடமிருந்து ரூ.1,66,630/-ற்கு கிரையத்திற்கு வாங்கினேன். மேற்படி இடத்திற்கான கூட்டு பட்டாவில் என் பெயரை சேர்ப்பதற்காக கடந்த 12.05.2026ம் தேதி விண்ணப்ப எண் 2026/N103/28/007082-ன் படி விண்ணப்பத்திருந்தேன். அந்த விண்ணப்பமானது தற்போது வரை கீழத்திருச்செந்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்கள் வசம் நிலுவையில் உள்ளது. அது சம்பந்தமாக அவரை சந்திப்பதற்காக நான் 04.06.2026ம் தேதி மதியம் சுமார் 12.00 மணி அளவில் கீழத்திருச்செந்தூர் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றேன். அலுவலகம் பூட்டியிருந்தது. பின்னர் நான் அன்றைய தினம் (04.06.2026) மாலை சுமார் 05.42 மணியளவில் எனது செல்போன் எண் 9994110945-ல் இருந்து கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்களின் செல்போன் எண் 9444931992-ற்கு போன் செய்து பேசினேன். அப்போது அவர் என்னிடம் நிலுவையில் உள்ள எனது விண்ணப்பம் தொடர்பாக மறுநாள் (05.06.2026) மதியத்திற்கு மேல் வந்து பாருங்கள் என்றும், அப்படி வரும் போது நான் ஏற்கனவே உங்களுக்கு முடித்து கொடுத்துள்ள கூட்டு பட்டாவிற்கான வேலைக்காக, நான் ஏற்கனவே உங்களிடம் கேட்டிருந்த ரூ.10,000/-யையும் கொண்டு வந்து விடுங்கள் என்றும் கூறினார். நான் அவரிடம் சார் ரூ.10,000/- என்பது ரொம்ப அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன். உடனே அவர் என்னிடம் சரி அதில் ஒரு ரூ.2,000/-

குறைத்துக்கொண்டு, ரூ.8,000/- கொண்டு வாருங்கள் என்று கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி சார் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். மறுநாள் (05.06.2026) நான் அவரை பார்க்க செல்லவில்லை. நேற்றைய முன்தினம் (07.06.2026) மதியம் சுமார் 01.20 மணியளவில் திரு.சரவணன் அவர்கள் எனக்கு போன் செய்து எங்கள் பகுதியை சேர்ந்த ஒரு நபரை பற்றி என்னிடம் விசாரித்தார். நானும் எனக்குத் தெரிந்த விபரங்களை அவரிடம் கூறினேன். அவரும் அதனை கேட்டுவிட்டு சரி என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். வேறு எதுவும் பேசவில்லை. இந்நிலையில் நான் நேற்று (08.06.2026) மதியம் சுமார் 2.45 மணியளவில் கீழத்திருச்செந்தூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்களை சந்தித்து நிலுவையில் உள்ள என்னுடைய மனு மீதான நடவடிக்கை குறித்து கேட்டேன். அப்போது அவர் என்னிடம் இருந்து என்னுடைய இடத்திற்கான ஆவணங்களை வாங்கி பார்வையிட்டுவிட்டு சரி ரெடி பண்ணி தருகிறேன், நான் ஏற்கனவே முடித்து கொடுத்த பட்டா வேலைக்காக நான் கேட்டிருந்த பணம் ரூ.8,000/- என்னாச்சு என்று கேட்டார். நான் உடனே அவரிடம் சார் கையில் வைத்திருந்த பணம் செலவாகிவிட்டது, வெறும் ரூ.3,000/-ம் தான் கையில் உள்ளது என்று கூறினேன். உடனே அவர் சரி இருப்பதை முதலில் கொடுங்கள் என்று கூறினார். நானும் வேறு வழியில்லாமல் என் கையில் இருந்த பணம் ரூ.3,000/-தை அவரிடம் கொடுத்து விட்டேன். உடனே அவர் அதனை வாங்கி கொண்டு சரி ஏற்கனவே முடித்து கொடுத்த பட்டா வேலைக்கான மீதிப்பணம் ரூ.5,000/- மற்றும் தற்போதுள்ள பட்டாவிற்கான வேலைக்காக ரூ.5,000/- என மொத்தம் ரூ.10,000/-தை நாளைக்கு (09.06.2026) கொண்டு வந்து கொடுங்கள் என்று கூறினார். நானும் அவரிடம் வேறு வழியில்லாமல் சரி சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் நான் யோசித்து பார்த்த போது, நாம் ஆவணங்கள் அனைத்தும் சரியாக வைத்திருந்தும் ஒரு அரசு அதிகாரி அவரது வேலையை செய்வதற்கும், செய்த வேலைக்கும் இப்படி லஞ்சம் கேட்கிறாரே என்று எனக்கு மன உளைச்சலாக இருந்தது. எனவே அவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். என்னிடம் ரூ.10,000/- லஞ்சம் கேட்கும் கீழத்திருச்செந்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by G.சுடலைமணி 09/06/2026. இணைப்பு : (1) Doc.No.1609/2004-ன் நகல், (2) பட்டா மாறுதல் மனு எண் 2026 / N103 / 28 / 006781-ன் நகல், (3) பட்டா எண் 820-ன் கணினி பிரதி நகல், (4) Doc.No.2727/2024-ன் நகல், (5) பட்டா மாறுதல்

மனு எண் 2026 / N103 / 28 / 007082-ன் நகல். Sir, Received by me on 09.06.2026 at 09.30 hrs & verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.03/2026, u/s 7(a) & 7(b) of the Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 at 10.00 hrs. xxxxxx s/d., by J.ANITHA 09.06.2026, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் புகார் மனுவுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

J. Anitha
09.06.26.

[J.ANITHA]
Inspector of Police,
V&AC, Thoothukudi.